**ஆலையடிவேம்பு பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக் மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து ஆலையடிவேம்பு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டுக் குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 11 வாகனங்களின் ரூபா 4,950,000 பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறித்த வாகனங்களின் பெறுமதி காட்டப்படல் வேண்டும். | விலை மதிப்பீடுகள் முடிவடைந்த பின்னர் வாகனங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் வாகனங்கள் என தனித்து பிரித்து காட்டப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 5,279,209 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 1,566,243 தொகையாக ஆக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2019 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | 2018 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ------------- | ------------ | ------------- | -------------- | ------------- | ------------ | ------------- | -------------- | ------------- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,000,000 | 954,863 | 1,039,725 | 140,976 | 1,000,000 | 727,030 | 501,192 | 225,838 |
| வாடகைகள் | 4,320,000 | 4,511,770 | 4,497,615 | 620,246 | 2,500,000 | 3,100,398 | 3,018,125 | 623,591 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,075,000 | 517,085 | 517,085 | 16,680 | 900,000 | 652,330 | 652,330 | 16,680 |
| ஏனைய வருமானம் | 14,416,000 | 12,012,781 | 10,732,831 | 5,865,300 | 14,541,000 | 9,121,158 | 4,535,808 | 4,585,350 |
| | 20,811,000 | 17,996,499 | 16,787,256 | 6,643,202 | 18,941,000 | 13,600,916 | 8,707,455 | 5,451,459 |

**2.2.2 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 ஆண்டிலிருந்து 2013 வரைக்குமான இறைச்சிக் கடை குத்தகை நிலுவையாக ரூபா 761,222 தொகை அறவிடப்படாமல் காணப்படுகின்றது. | குறித்த நிலுவை தொகை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | இத்தொகையினை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு சிபாரிசு செய்து பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்- அம்பாறை ஊடாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி கிடைக்க பெற்றவுடன் மேலதிக நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படும். |

**2.2.3 வியாபார உரிமைப் பத்திரக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திரையரங்கு மற்றும் ஐந்து நொத்தாரிசு அலுவலகங்கள் என்பன 2019 இல் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதிலும், வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணம் பிரதேச சபைகள் சட்டம் 150 (1) இன் பிரகாரம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிமைப் பத்திரக் கட்டணங்கள் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் திரையரங்குக்கு உரிமைப் பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் நொத்தாரிசு அலுவலகங்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதோடு வருடாந்தம் வியாபார உரிமைப் பத்திரக் கட்டணம் அறவீடு செய்யப்படும். மேலும் 2020ம் ஆண்டு உரிமைப் பத்திரக் கட்டணம் அறவீடு செய்யப்படும் போது 2019ம் ஆண்டுக்கான நிலுவை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.2.4 முத்திரைக் தீர்வைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2019 ஏப்ரல் இருந்து திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் அறவிட்ட முத்திரை தீர்வையினை கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முத்திரை தீர்வையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மிக விரைவாக முத்திரை தீர்வை தொடர்பான தகவல்கனை பெற்று கிழக்கு மாகாண திறைசேரிக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி தொடர்பான கருமங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 20 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2020 மே 28 வரை 14 விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். | சபையினால் எதிர்வரும் காலங்களில் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக தயாரிக்கப்படவேண்டிய உபவிதிகள் சபையினால் தயாரிக்கப்பட்டு சபையில் சமர்ப்பித்து அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படும். |

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் சபையினால் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு இறுதி கணக்கறிக்கையுடன் இணைக்கப்படும். |

#### (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு ரூபா 1,253,940 செலவில் நிர்மாணிக்கப்பட்ட திண்மக்கழிவு அகற்றும் நிலையம் மற்றும் 2018 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,210,000 பெறுமதியான 02 இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிலையத்தினை மீண்டும் இயங்கச் செய்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | குறித்த மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பினை தெரிவிக்கும் போது சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட தேசனப்பசனை தயாரிக்கும் இயந்தரம் சபையின் அனுமதியுடன் பொருத்தமான பிரதேச/ நகர/ மாநகர சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்டும். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும்.இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2019ம் ஆண்டு மக்கள் பங்குபற்றதலுடான ஒவ்வொரு வட்டாரத்தினையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டத்திற்கமைய எதிர்வரும் காலங்களில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தயாரிக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நீர் இணைப்புப் பெறுவதற்காக அகழப்பட்ட வீதியை மீள நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக 114 குடியிருப்பாளர்களிடமிருந்து 2018 ஆம் ஆண்டு ரூபா 233,100 அறவீடு செய்யப்பட்டிந்ததும் அகழப்பட்ட வீதிகள் புனரமைக்கப்படவில்லை. | அகழப்பட்ட வீதிகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேணடும். | இவ்விடயம் தொடர்பாக சபையில் தீர்மானமொன்றினை மேற்கொண்டு வரவு செலவுத்திட்டத்தில் குறித்த சீர் செய்தல் நடவடிக்கைக்காக ஏற்பாடு ஒன்றினை ஏற்படுத்தி மிக விரைவாக வீதியில் காணப்படும் குழிகளை காலாண்டுக்கு அல்லது அரையாண்டுக்கு ஒருமுறை சபையினால் முழுமையாக சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை கொண்ட வேலைத்திட்டம் 2017 இன் கீழ் ஆலையடிவேம்பு சாகாமம் வீதியிலிருந்து பனங்காடு பாலம் வரை 425 மீற்றர் தூரத்திற்கு குடிநீர் விநியோக குழாய் விஸ்தரிப்பிற்கு ரூபா 1.5 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. சபையினால் இச் செயற்திட்டம் முடிவுற்றதாக ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு 2018 ஜனவரி 19 ஆந் திகதி ரூபா 1,498,183 உத்தேச மதிப்பீட்டிற்கு அமைய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், இது தொடர்பான வேலைகள் 2020 மே 28 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை சபையினால் உரிய காலத்தில் எடுக்கப்படுடல் வேண்டும். | இவ்விடயம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையுடன் கலந்துரையாடி செலுத்தப்பட்ட தொகைக்கு ஏற்றவாறு குடிநீர் குழாய்களை விஸ்தரிப்பு செய்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆளணி பட்டியல்களுக்கமைய, மீளாய்வாண்டில் 04 பதவிகளுக்கான 04 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லலை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இவ்விடயம் தொடர்பாக உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடி பதவி வெற்றிட ஆளணியினை நிரப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) 1991ம் ஆண்டு முதல் மரணமடைந்த 04 உத்தியோகத்தர்களின் ஊழியர் இடர் கடன் நிலுவை ரூபா 65,069 தொகை அறவிடப்படாமல் காட்டப்பட்டுகின்றது. | நிலுவைகளை அறவீடு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த 04 உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணையாளர் விபரங்கள் மற்றும் அவர்களது மனைவி, பிள்ளைகள் தொடர்பான விபரங்கள் மற்றும் ஆவணங்கள் பெறமுடியாத நிலையில் எதிர்காலத்தில் இவ் உத்தியோகத்தர்களுக்கான பணிக்கொடை கிடைக்கும் பட்சத்தில் கடன் தொகை அறவீடு செய்யப்பட்டு சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிவரை நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 199,667,204 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடு இற்றைப்படுத்தபட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடுகள் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேடு தயாரிப்பதற்கான அனைத்து தகவல் மற்றும் தரவுகளும் சபையினால் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றது. எதிர்வரும் காலப்பகுதியில் நிலையான சொத்துப் பதிவேடு முழுமையாக தயாரிக்கப்பட்டு சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி தனித்தனியாக கணக்குகளில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

#### 3.4.2 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 07 வாகனங்கள் 04 ஆண்டுகளிற்கு மேலாக திருத்தியமைத்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை திருத்தி மீளப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த வாகனங்களை விரைவாக திருத்தி பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 25 வாகனங்களில் 10 வாகனங்களின் உரிமை மாற்றப்படாமலுள்ளது. | உரிமை மாற்ற் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபைக்கு சொந்தமான வாகனங்களின் உரிமை மாற்றம் தொடர்பான ஆவணங்கள் மோட்டர் போக்குவரத்து திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |